# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 6
ஜமா. அவ். 9
புதன் (19-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 90
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


# "தமிழ்" என்றால் இனவாதமாம்!

# 'தமிழை" அகற்றினாலே அங்கீகாரமாம்!

## தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்துக்கு தார்மீகவாதிகளின் நிபந்தனை!

தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகத்தை அரசால் 'அங்கீகரிக்கப்பட்ட ஒரு அறங்காவல் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளவேண்டுமானால், கழகத்தின் பெயரிலுள்ள "தமிழ்" என்ற சொல்லை முற்றாக அகற்றி விடவேண்டுமென்றும், "தமிழ்" என்று இருப்பது வகுப்புவாதமென்றும், 'தமிழை' அகற்றினால் மட்டுமே அரசு அங்கீகாரம் கிடைக்கும் என்றும் இதற்கென நியமிக்கப்பட்டிருந்த மந்திரிகள் உபகுழு மேற்படி கழகத்துக்கு அறிவித்திருப்பதாக தெரியவந்துள்ளது.

தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம், கடந்த 1977 ஆகஸ்டில் ஏற்படுத்தப்பட்டதும், பிரபல முன்னாள் தொழிற்சங்கவாதியும் தமிழ்ப் பிரமுகருமான திரு. கே. ஸி நித்தியானந்தா அதன் தலைவராகப் பணிபுரிந்து வருவதும், ஆகஸ்ட் கலவரத்தில் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு இக்கழகம் முன்னின்று உதவிபுரிந்து வருவதும், சன்சோனி ஆணைக்குழு முன் கலவர நிகழ்ச்சிகள் குறித்து கழகம் திட்டவட்டமான சாட்சியம் அளித்ததும் தெரிந்ததே.

தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகத்தை அங்கீகரிக்கப்பட்ட ஒரு அற நிறுவனமாக மாற்றுவதற்கு அதன் தலைவர் திரு. கே. ஸி. நித்தியானந்தா பலகாலமாக முயற்சியெடுத்துவந்திருக்கிறார். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா முன்பு பிரதமராக இருந்த போதும், ஜனாதிபதியான பின்னரும் அவருடன் இது சம்பந்தமாக தொடர்பு கொண்டிருந்தார்.

கொழும்பு மேற்கு இடைத் தேர்தலின்போது, தமிழர்களின் வாக்குகளை யூ.என்.பி. பக்கம்திருப்புவதற்காகவோ என்னவோ, தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம் அங்கீகரிக்கப்பட்ட அற நிறுவனமாக்கப்படும் என்று கழகத்தின் தலைவர் திரு. கே. ஸி. நித்தியானந்தாவுக்கு உறுதிமொழி வழங்கப் பட்டிருந்ததாம். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனைப்படி இந்தப்பிரச்சினைபற்றி ஆராய்வதற்கு மந்திரிசபை உபகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. கொழும்பு மேற்கு இடைத்தேர்தல் முடிந்தபின்னர், இந்த உபகுழு, கே. ஸி. நித்தியானந்தாவை அழைத்து இதுசம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாம். அகதிகள் மறுவாழ்வு என்ற பெயரில் திரு. கே. ஸி. நித்தியானந்தா அரசியல் இயக்கம் ஒன்றை நடத்துவதாக உபகுழு குற்றம் சுமத்தியதாம். இதை மறுத்த திரு. கே. ஸி. அவர்கள். மறுவாழ்வுக்கழகம் மூலம் ஆயிரக்கணக்கான அகதிகள் பொருளாதார உதவி பெற்றார்களே தவிர, அரசியல் உதவிபெறவில்லை யென்று சுட்டிக்காட்டினார். ஆகஸ்ட் கலவரத்தின்போது பாதிக்கப்பட்டு அகதிகளானோர் தமிழர்கள் மட்டுமே என்ற காரணத்தினால், தமது கழகத்துக்கு "தமிழ் அகதிகள் மறு வாழ்வுக்கழகம்" என்று பெயர் சூட்டப்பட்டதாகவும் திரு. நித்தியானந்தா தெரிவித்தார்.

கழகத்தின் பெயரிலுள்ள "தமிழ்" என்ற சொல் வகுப்புவாதமாகப் படுகிறதென்றும், அதை நீக்கினால்மட்டுமே அற நிறுவனமாக கழகத்தை அங்கிகரிக்கமுடியுமென்றும், வகுப்புவாத அமைப்புக்களுக்கு அரசு ஆதரவளிக்க முடியாதென்றும் மந்திரிசபை உபகுழு திட்டவட்டமாக கூறிவிட்டது.

பின்னர் இதுசம்பந்தமாக ஜனாதிபதி ஜே. ஆருடன் திரு. கே. ஸி. நித்தியானந்தா தொடர்புகொண்டு கேட்டபொழுது, கழகத்தை அற நிறுவனமாக்குவதில் தனக்கு ஆட்சேபனை இல்லையென்றும், மந்திரிசபை உபகுழு விரும்பாதபோது தம்மால் எதுவும் செய்ய முடியாதென்றும், பாலுக்கும்காவல் பூனைக்கும், தோழன் என்ற நிலையில் பதிலளித்தாராம்.

தமிழ் என்ற சொல்லைக் கொண்டு தமிழ் அகதிகளுக்கு சேவைசெய்ய ஒரு நிறுவனம் இருப்பது வகுப்புவாதமென்பவர்கள், நாளை தமிழர்கள் தமிழைப்பேசுவதையும் வகுப்புவாதமென்று கூறி அதைத்தடைசெய்ய முன்வரமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? 'தமிழ்' என்று உச்சரிப்பது வகுப்புவாத மென்று கூறுபவர்கள் புத்தாண்டு பற்றி தாம் வெளியிட்ட ஆங்கில செய்தியில் கூட "அளுத் அவுறுத" என்ற சிங்களச் சொல்லைப் பயன்படுத்தியது எந்தவாதம் என்று கேட்கின்றனர் தமிழ்மக்கள்.

# ஆசிரியர் நியமனங்களில் தமிழ்ஈழம் புறக்கணிப்பு!

தார்மீகம் பேசும் ஜே. ஆரின் அரசாங்கம் ஆசிரிய நியமனங்கள் விஷயத்தில் தமிழ் ஈழத்தொகுதிகளுக்கும். சிங்களசிறீலங்காத் தொகுதிகளுக்குமிடையே பாரபட்சமும், புறக்கணிப்பும் காட்டிவருகிறது.

## யாழகம் இரட்டிப்பு புறக்கணிப்பு!

சிங்களசிறீலங்காவிலுள்ள தொகுதிகளில் ஒரு தொகுதிக்கு 16 பேர் வீதம் ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்பட்டு வருகிறது. அதே சமயம் தமிழ் ஈழத்தொகுதிகளுக்கு தொகுதிக்கு எட்டுப் பேர்வீதமே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதிலும்; கிழக்கு மாகாணத் தொகுதிகளுக்கு இந்த எட்டுப்பேர் நியமனம் வழங்கப்பட்டு முடிந்து விட்ட போதிலும், யாழ்ப்பாண குடா நாட்டு தொகுதிகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

சிங்கள சிறீலங்காத் தொகுதிகளுக்கு கொடுக்கப்பட்டது போல தமிழ்ஈழத் தொகுதிகளுக்கும் 16 பேருக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதிக்கு வலியுறுத்தியுள்ளனர். தான் அப்படியே உத்தரவிடுவதாக ஜனாதிபதி கூறினாரெனினும் இன்னும் எதுவும் நடைபெறவில்லை யென்று கூட்டணி பா. உ. ஒருவர் கூறினார்.

# 'மரணத்திலிருந்து முஜிபுரை மீட்டவர் அலி பூட்டோ! அவரைத் தூக்கில் தொங்கவிடலாமா?"

—மானிப்பாய் பா. உ.

"திரு. அலி பூட்டோ ஒரு சாதாரண மனிதரல்லர். அண்மைக்காலத்தில் உலகின் இந்தப்பகுதியில் தோன்றிய முக்கிய பெரும் தலைவர்களில் அவரும் ஒருவர். வங்கதேசம் உருவாக்கப்பட்ட பின்னர். பாகிஸ்தானில் அமைதியையும் உறுதியான நிலைப்பாட்டையும் கொண்டு வந்தவர் திரு. பூட்டோ அவர்களே. பாகிஸ்தானில் பல ஜனநாயக அமைப்புக்களுக்கு மீண்டும் உயிரூட்டியவரும், பாகிஸ்தான் மக்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகளை வழங்கியவரும் அவரே. சர்வாதிகாரி யாஹியாகான், முஜிபுர் ரஹ்மானுக்கு மரணதண்டனை விதித்தபோது அதிலிருந்து முஜிபுர்ரஹ்மானை காப்பாற்றியவரும் பூட்டோதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அலிபூட்டோவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ரத்துச் செய்யுமாறு சர்வதேச மன்னிப்புச்சபையும் கோரிக்கை விடுத்துள்ளது.

"அலி பூட்டோவின் பிரச்சினையில் — அணிசேரா நாடுகளின் தலைமைப் பதவியை வைத்துக்கொண்டிருக்கும் நமது நாட்டின் நிலையென்ன? இந்த அரசாங்கத்தின் மனப்பான்மை என்ன? ஜனநாயக ரீதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை தூக்கிலிடுவதை எந்தவித ஆட்சேபனையுமின்றி நாம் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறோமா? அல்லது ஏனைய நாடுகளுடன் சேர்ந்து பூட்டோவை விடுதலை செய்யக்கோரி குரலெழுப்பப் போகிறோமா"?

இவ்வாறு 6-4-78ல் தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசிய மானிப்பாய் பா. உ. வி. தர்மலிங்கம் அரசாங்கத்தைக் கேட்டார்.

# தமிழ்த் தொழிலாளரின் மேதின விழா!

தமிழ்த் தொழிலாளரின் மேதினவிழா யாழ் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 1-5-78 திங்கட்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கின்றது. மொழிவழித் தொழிற்சங்கங்கள், இளைஞர் பேரவை, மாதர்பேரவை, மாணவர்கள், தமிழர் கூட்டணி, ஒன்றுசேர்ந்து இவ்விழாவை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விழாவைச் சிறப்பாக நடத்தி முடிக்க திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையில் விழா அமைப்புக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. குழுவில் முக்கிய செயற்குழு

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏசுநாதரின் படம் அடித்து நொறுக்கப்பட்டது!

# தந்தையும் தம்பியும் வெட்டிக்கொல்லப்பட்டனர்!

## சுதந்திரன் 'போர்மன்' இரத்தினராஜ் செம்சன் சாட்சியம்!

சன்சோனி ஆணைக்குழு முன் ஆகஸ்ட் கலவரத்தில் பெரும் பாதிப்புக்குள்ளான 'சுதந்திரன் போர்மன்' இரத்தினராஜ் சேம்சன் பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

மகரகமையில் ஆகஸ்ட்டில் இருந்தேன். 20ம் தேதி 4-30 மணிக்கு என் வீட்டை உடைத்தார்கள். கடந்த 26 வருடம் நாங்கள் மகரகமையில் இருந்தோம். மகரகமையில் எதிரிகள் இல்லை. அன்று சனிக்கிழமையாதலால் காலைசந்தைக்குப்போனேன், தமிழ் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. தமிழ்க்கடை பலகைகளில் 'மரண நோட்டீஸ்' ஒட்டப்பட்டிருந்தது. தமிழர்களைக் காணவில்லை. வீட்டை நோக்கிச் சென்றேன். என் வீட்டில் மனைவி பிள்ளைகளுக்குபயமாக இருப்பதாகக் கூறினார்கள். அம்மா வீட்டிற்கு போவோம் என்றேன். அம்மா வீடு கிட்டத்தான் இருந்தது. அன்று அம்மா வீட்டில் தங்கினோம். மாலை 4-30 மணிக்கு 40 பேர் வீட்டை நோக்கி வந்தனர்.

வீட்டு வாசலில் யேசுநாதரின் பெரிய படம் இருந்தது. தமிழ் கிறிஸ்தவனா? என்று கேட்டார்கள். 'ஆம்' என்றேன். உடனே யேசுநாதரின் படத்தை பாய்ந்து உடைத்தனர். பின் 30 பேர் என்னை அடித்தார்கள். நான்யேசுவே யேசுவே என்று கத்தினேன். அப்போது என்னை உருட்டி அடித்தார்கள் நான் வலி தாங்காது குளறினேன்.

அப்போது என் அருகில் அம்மா வந்தார் அவரையும் உதைத்தார்கள். பின்னர் அப்பா ஓடி வந்தார்; அப்பாவை வாளால் துண்டு துண்டாக வெட்டினார்கள். இதனை அடுத்து எனது கடைசித் தம்பி சார்ல்ஸ் ஓடி வந்ததும் அவரின் காலிலும் வெட்டு விழுந்தது. அவர் கீழே விழுந்ததும் தலையில் வெட்டினார்கள். எனது மனைவி பிள்ளைகள் கத்தினார்கள். மற்றொரு தம்பி டேவிட் ஓடிவந்தான். பயந்துதிரும்பி ஓடினான். முதுகில் வெட்டினார்கள், மூவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்து புரண்டார்கள். அக்கம்பக்கத்தவர்கள் சேர்ந்து குளறினார்கள். பின் குண்டர்கள் ஓடிவிட்டார்கள். 6-30 மணிவரை சம்பவம் நடந்தது.

குண்டர்கள் வந்ததும் யாழ்ப்பாணத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் பண்டாரவை கொலைசெய்துவிட்டார்கள். அவருடைய பிரேதம் இன்று மகரகமைக்கு கொண்டுவந்ததாகச் சொன்னார்கள்,

தமிழ்க் கடைகளில் ஒட்டப்பட்ட மரண அறிவித்தல் பண்டாரவைப் பற்றியதுதான் என நினைக்கிறேன்.

என் தகப்பனும் தம்பியும் கொல்லப்பட்டனர். மரண வீட்டிற்குபோகமுடியவில்லை. அன்று முழுவதும் ஊரடங்குசட்டம் இருந்தது. சடலத்தை காட்ட களுபோவலை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றனர். ஜீப்பைவிட்டு இறங்கவில்லை. நிலைமை மோசமாக இருந்தது.

ஊரடங்குச் சட்டத்தில் ஆஸ்பத்திரியில் பெருந்திரளானவர் இருந்ததால் பயந்தேன். சிங்கள வாலிபன் யாழ்ப்பாணத்தில் சிங்களவரை கொலைசெய்துவிட்டார்கள் என இனத்துவேஷத்துடன் ஆஸ்பத்திரி கூட்டத்தில் கதைத்தார். களுபோவலை ஆஸ்பத்திரிக்குள்ளிருந்து தமிழ் ஊழியர்களை அடித்து இரத்தக் காயத்துடன் தூக்கி எறிந்ததைப் பார்த்தேன்.

இன்ஸ்பெக்டர் ஜெயவர்த்தனா அனுதாபப்பட்டுஎன்னை இறங்கவேண்டாமென்றார். ஜிப்புக்கு கல்வீசினார்கள். சவச்சாலைக்கு பாதுகாப்புடன் கூட்டிச்சென்றனர். சவச்சாலை திறந்ததும் தகப்பனின் சடலத்தைப் பார்த்தேன்; என் தகப்பனின் பெயர் டி. எஸ். ஜேசுதாசன். தம்பியின் பெயர் சாள்ஸ் யேசுபாதம் யேசுதாசன் எங்கள் வாக்குமூலத்தை பதிவுசெய்தார்கள். சடலத்தை பாரம் கொடுத்தார்கள். ஒன்றும் செய்யமுடியவில்லை, தகப்பன் தலைப்பக்கத்திலிருந்து பிரார்த்தனை செய்துவிட்டு சவச்சாலையில் அடக்கம்செய்ய ஒப்படைத்தேன்.

இதற்கு அவர்கள் ரூபா 150/- தரும்படி கேட்டார்கள். அதனை நாங்கள் கொடுத்துவிட்டு வந்தோம். அங்கிருந்து நாங்கள் அகதிகள் முகாமிற்கு சென்றோம்: அகதிகள் முகாமில் இருக்கும்போது வெட்டுண்ட தம்பி யாரும் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. இதனை அடுத்து நாம் அங்குசென்று அவரது சடலத்தை எடுத்து வந்து சகல மரியாதைகளுடன் அடக்கம் செய்தோம; வெட்டப்பட்ட கடைசித் தம்பிதற்போது குணமடைந்துள்ளான்.

இவ்வாறு இரத்தினராஜ் செம்சன்கூறினார். சாட்சியம் அளிக்கும்போது இவர் பல தடவை அழுதார்.

இவரை இடைக்கிடை சட்டத்தரணி ஆறுதல்கூறி சாந்தப்படுத்தினர்.



வாளால் வெட்டிக்கொல்லப்பட்ட டி. எஸ். யேசுதாசன்



வாளால்வெட்டிக்கொல்லப்பட்ட சாள்ஸ் யேசுபாதம் யேசுதாசன்

# நிர்வாணமாக்கி நெருப்பினால் சுட்டனர்!

## "தமிழ் பறையா பண்டி" எனச் சிங்களத்தில் ஏசினர்!

## சிங்களவனைக்கொண்டு தமிழர் வீடுகளைக் கொளுத்தினர்!

## குடிநீருக்குப் பதிலாக சிறுநீர் குடிக்கச் சொன்னார்கள்!

**ஆளும் சிங்கள இனத்தைச் சேர்ந்த யாரோ இருவர், ஏதோ காரணங்களுக்காக மடுவில் சுடப்பட்டதை ஒரே சாட்டாகக் கொண்டு அதே இனத்தைச்சேர்ந்த இராணுவ வீரர்கள் ஆளப்படும் இனத்தைச் சேர்ந்த அப்பாவி தமிழர்களை சித்திரவதை செய்து கொடுமைப்படுத்திய கொடூர சம்பவம் இது.**

மன்னார்த் தொகுதி— தச்சன் மருதமடுவைச்சேர்ந்த முத்துக்குமார்பொன்னம்பலம் சன்சோனிக்கமிஷன் முன் கூறியதாவது:-

"மருதமடுவில் நான் கமம் செய்கிறேன். மதவாச்சி,மன்னார் ரோட்டால், மடுவிற்கு வந்து, காட்டுக்குள்ளால் மருதமடு செல்லவேண்டும். அங்கு 40 வீடுகள் இருந்தன. மருதமடுவில் இருக்கும் எல்லோரும் கமக்காரர்கள். இராணுவம் வரும்வரை அந்தக்கிராமத்தில் எவ்வித கலவரமும் நடக்கவில்லை. ஒருவரை ஒருவர் தாக்கியது கூட இல்லை.

ஆகஸ்ட் 24ம் தேதி காலை, நானும் மருமகனும் 4மக்களும் கமத்திலிருந்து 2வண்டியில் நெல் கொண்டுவந்தோம். வண்டியிலிருந்து நெல்லை இறக்கி விட்டு, மாட்டை அவிழ்த்துக்கட்டினோம். அப்போது 2 ஆமிக்காரர் சுட்டனர். 4மக்களையும் வரச்சொன்னார்கள். ஜீப்பில் அவர்களை ஏற்ற நாய் விடவில்லை. ஆமிக்காரரை நாய் கடிக்கப்போனது. நாயைப் பிடிக்கச் சொன்னார்கள். ஆமிக்காரர் துவக்கை நீட்டியபடி வந்தார்கள். கையை உயர்த்தச் சொல்லி சிங்களத்தில் கூறினார்கள். 3 இளைஞரைக் கூட்டிச்சென்று முழங்காலில் இருக்கச்சொன்னார்கள்; என்னையும் கூப்பிட்டார்கள். பின் என்னையும் ஒரு சிறுவனையும் நிற்கச்சொன்னார்கள். அந்த இளைஞர்களில் ஒருவர் குணவீரசிங்கம்;

பின் 3 ஆமிக்காரரும், பெரேரா என்ற சிங்கள இளைஞரும் வந்தனர். பெரேரா மடுவில் சுடப்பட்ட பெண்ணின்மகளுக்கும். நெருப்புப்பெட்டி தரும்படி கேட்டார்கள். பெரேரா தன் பாக்கட்டிலிருந்து நெருப்புப்பெட்டி எடுத்துக் கொடுத்தார். ஆமிக்காரர் நெருப்புப்பெட்டியை பெரேராவிடம் கொடுத்து வீட்டுக்குத் தீவைக்கச் சொன்னார்.

எனக்கு அடித்துவிட்டார்கள். எனக்கு முன் யந்திரத் துப்பாக்கியுடன் நின்றார்கள். ஒன்றும் செய்ய முடியவில்லை. 2 ஆமிக்காரரும் பெரேராவும் வீட்டிற்குள் போனார்கள், பெட்டிஉடைக்கும் சத்தம் கேட்டது. துவக்கும் 16 தோட்டாக்களும், கடிகாரம், 150 ரூபாவும் பெட்டிக்குள் இருந்தன. துவக்கையும் தோட்டாக்களையும் ஆமி ஜீப்பிற்குக் கொண்டுசென்றார்கள்.

ஜீப்புக்குக் கிட்ட 25பேர் கையை உயர்த்தியபடிமுழங்காலில் இருந்தார்கள். ஏ. எஸ். பியையும், முருங்கன் சப் இன்ஸ்பெக்டரையும். அடையாளம் காட்டமுடியும். ஏ. எஸ். பி. நீளமான தடி வைத்திருந்தார். கட்டளை பிறப்பித்துக்கொண்டிருந்தார். பின் ஜீப்புக்குப் போகும்படி ஆமிக்காரர் சொன்னார். 5பேர் முன்னுக்குப் போய் ஏறினோம். மற் [illegible] என்றனர்.

ஜீப்பிற்குள் எங்களை முகம் குப்புறப் படுக்கச் சொன்னார்கள். எங்களுக்கு மேல் தங்கள் சப்பாத்துக்காலை மிதித்துக்கொண்டு ஆமிக்காரர் ஏறினார்கள். ஏ.எஸ்.பி முன் சீற்றில் இருந்தார்.

பெண் சுடப்பட்ட இடத்தில் போய் ஜீப்பை மறித்தார்கள், யார் இந்தப்பெண்ணைச் சுட்டதாகக் கேட்டார்கள். தெரியாதென்றோம். அங்கு ஒருவர் ஜீப்பில் ஏறினார் அவர் பெயர் சதாசிவம். முருங்கன் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுபோனார்கள்.

பின்பக்கத்திலுள்ளபொலிசாரிடம் பாரம் கொடுத்தார்கள். யாரடா மனுஷியைச் சுட்டதென்று கேட்டார்கள். ஜீப்பிலிருந்து இறக்கி அடித்தபின் எங்களை விறுந்தையில் ஒய்வு எடுக்கச்சொன்னார்கள்.

கம்பிக் கூட்டுக்குள் எங்களை அடைத்தார்கள். 7மணிக்கு கான்ஸ்டபில் பெர்ணண்டோ எங்கள் வாக்குமூலத்தை பதிவுசெய்தார் பின் கூட்டுக்குள் விட்டனர்.

### தண்ணீர் கேட்டபோது...

இரவு 9மணிக்குஒவ்வொருவராகக் கூப்பிட்டனர். யார் சுட்டது என்று கேட்டார். தெரியாதென்றதும், விறுந்தையில் படுக்கச் சொன்னார். பின்கொட்டனால், உள்ளங்காலில் அடித்தனர். ஐயோ என்று சத்தம் போட்டோம். 'தமிழ் பறையா தமிழ்பண்டி' என்றுசிங்களத்தில்பேசி 5பேருக்கும் அடித்தார்கள். சரியான களைப்பாக இருந்தது. தண்ணீர் கேட்டபோது சலத்தை குடிக்கும்படி சொன்னார்கள்.

### நிர்வாணமாக்கி நெருப்பால் சுட்டனர்

ஒரு பொலிஸ், நெருப்புக்கொள்ளி கொண்டுவரச் சொன்னார். மேடையில் 5 பேரையும் நிற்கச் சொன்னார். எல்லாரையும், சாரம் வேட்டி உரிந்து நிர்வாணமாக்கினார்கள் எல்லாரையும் நெருப்புக் கொள்ளியால் சுட்டனர். முதல் கொள்ளிசுட்டு கருக மற்ற கொள்ளியால் சுட்டு, சித்திரவதை செய்தனர்! தலையிலிருந்த உள்ளங்கால்வரை சுட்டார்கள்.

இரவு நாங்கள் படுக்க ஆயத்தப்படுத்தியபோது தண்ணீரைக் கொண்டுவந்து

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை பதினெட்டில்

# சிந்திய தியாக ரத்தம்!

ஏப்ரல் பதினெட்டு—ஈழத்தமிழர்கள் நடத்தி வரும் இனவிடுதலைப்போரில் என்றுமே மறக்க முடியாத ஓர் நாள்!

அறப்போரிலீடுபட்டிருந்த அருமைத் தமிழ் மங்கையரை சிங்கள ஏகாதிபத்தியத்தினால் ஏவி விடப்பட்ட இராணுவக் குண்டர்கள் அடித்து உதைத்து தெரு வீதிகளிலே இழுத்து இம்சைக் குள்ளாக்கிய நாள்!

அஹிம்சா மூர்த்தி காந்தி மகான் காட்டிய வழியில் அறப்போராட்டத்திலீடுபட்டிருந்த தமிழ்மக்கள் மிலேச்சத்தனமாக எவ்வித அறிவிப்புமின்றி நாய்போல தாக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு துவம்சம் செய்யப்பட்ட நாள்!

ஆடைகுலைவுற, தமிழ்த் தங்கையர் போர்க்களத்திலிருந்து தூக்கிவீசப்படுகின்ற நிலையிலும் — தமிழ் வாழ்க! தமிழ் ஈழம் வாழ்க — என்று உறுதி குலையாமல் முழங்கி வீர வரலாறு தீட்டிய நாள்! அமைதிப் போரில் ஈடுபட்டிருந்த தமிழ் மங்கையரைத் தாக்குவதற்கு சொல்லாமல் கொள்ளாமல் வந்து குதித்த இராணுவக் கொடுமையாளர்களிடமிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்குகூட்டணியின் இன்றைய செயலதிபர் சிவா உடலெங்கும் விழுப்புண் ஏற்றிட்ட நாள்!

ஆம் 1961 ஏப்ரல் பதினெட்டு—அந்த நாளை எண்ணும் போது—அன்று நடந்த காட்சிகளை இன்று நினைவுக்கு கொண்டு வரும்போது—இதயம் சிலிர்க்கிறது — நரம்பு நாளங்கள் முறுக்கேறுகின்றன!

ஆம், இத்திகதிக்கு சரியாக 57 நாட்களுக்கு முன்னர் தான்—அதாவது 1961 பெப்ரவரி 20ம்திகதி-தந்தை செல்வாவின் தலைமையில் தமிழ் மக்கள் சிங்கள மொழித் திணிப்பை எதிர்த்து இரண்டாவது தடவையாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்தனர்!

முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டம் 1956 ஆம் ஆண்டு ஆனி ஐந்தாம் திகதி காலி முகத்திடலில் காடையரின் கல்லடிக்கும் பொல்லடிக்கும், ஆட்சியாளரின் சொல்லடிக்கும் மத்தியில் கொட்டும் மழைக்கிடையே சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து நடைபெற்றது.

இரண்டாவது சத்தியாக்கிரகப் போராட்டம்-ஆதிக்க சிங்கள மொழியை தமிழ் ஈழத்தில் திணிப்பதை எதிர்த்து 1961ம் ஆண்டு பெப்ரவரி 20ம் திகதி மறியல் போராட்டமாக உருவெடுத்தது!

ஆம் அன்று—யாழகத்தின் அரசாங்க செயலகத்தின் முன்னர் மறியல் தொடங்கியது! யாழ் அரசாங்க அதிபர் வெளியேற முடியாதவாறு தமிழ் வீரர்களால் முற்றுகையிடப்பட்டார்!

அரசாங்க அதிபரின் ஜீப் உறுமிக்கொண்டு புறப்படுகிறது!

குறுக்கே படுத்துக் கிடக்கிறார்கள் இயக்க வீரர்கள்!

பொலிஸ் வருகிறது—குண்டாந்தடிகள், துப்பாக்கிகள் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் சகிதம்!

வழிவிடுங்கள் என்கின்றனர் பொலிசார்! முடியாது என்கிறார்கள் தொண்டர்கள் உறுதிமிகுந்த குரலில்!

அதோ அமிர்தலிங்கம், மடித்துக்கட்டிய வேட்டியுடன் ஜீப்புக்கு குறுக்கே படுத்துக்கிடக்கிறார்—

ஜீப்போ அமிர் அண்ணனை நெரித்துக்கொண்டுபோவது போல உறுமுகிறது!

ஆனால் கலக்கமோ தயக்கமோ இன்றி களத்தில் காணப்படுகிறார் அமிர் அண்ணன்!

குண்டாந்தடி அடி விழுகிறது! குபீர் குபீர் என்று தொண்டர்களின் தலையிலிருந்து குருதி கொட்டுகின்றது!

துரைரத்தினத்தை இரு பொலிசார்கையிலும்காலிலுமாக தூக்கிப் பந்தாடுகிறார்கள்! அங்கும் இங்குமாக எறிந்து 'விளையாடு'கிறார்கள்!

அமிர் அண்ணனின் முதுகிலும் காலிலும் குண்டாந்தடியடிகள் பளார் பளாரென்று விழுகின்றன!

இறுதியில் — அடி அடியென்று அடித்து பொலிசாருக்கு கை சோர்ந்து விடுகிறது!

தொண்டர்களின் உறுதி வெல்கிறது! ஜீப் திருப்பி 'றிவேசில்' உள்ளே செல்கிறது!

ஆம் — இது தான் முதல் நாட் போராட்டம்!

இந்தச் செய்தி காட்டுத் தீ போல எங்கும் பரவுகிறது!

தலைவர்கள் எப்போது தங்களை அர்ப்பணிக்கிறார்களோ அப்போது மக்களும் எழுச்சி பெற்று தங்களை அர்ப்பணிக்க முன்வருகிறார்கள்!

யாழ் அரசாங்க செயலகத்தின் முன்னால், தொண்டர்களும் தலைவர்களும் கொட்டிய தியாக ரத்தம் தமிழ் பேசும்மக்களை எழுச்சியும் உணர்ச்சியும் பெற வைக்கிறது!

இதன்பின் இந்த போராட்டம் ஒரு மக்கள் போராட்டமாக—மக்கள் இயக்கமாக—உருவெடுக்கிறது!

தமிழ் ஈழத்தின் மூலைமுடுக்கெல்லாமிருந்து—ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து— நாள் குறித்து அறப்போர்க்களம் நோக்கி தமிழ் மக்கள் மறியல்போராட்டத்தில் கலந்து கொள்ள அணிதிரண்டுவந்து கொண்டிருக்கின்றனர்!

வாழ்க்கையின் வெவ்வேறு துறையினரும் — பல்வேறு மதத்தினரும், பிரதேசத்தினரும், வெவ்வேறு தொழில் செய்வோரும் தமிழன் என்ற ரீதியிலே ஒன்றுபட்டு இயக்கத்தை நடத்துகின்றனர்—

நாள் தோறும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்!

மறியல் போராட்டத்தில் கலந்து கொள்ள மக்கள் அணி அணியாக வந்து சேர்ந்து கொண்டிருக்கும் காட்சிகள்!

சத்தியாக்கிரகிகளின் உணவுப் பிரச்சினைகளையும் தமிழ் மக்களே போட்டியிட்டுக் கவனிக்கின்றனர்!

அரசாங்கச் செயலக வாசலை முற்றுகையிட்டு வீரத்தமிழ் பெண்கள் வீட்டையே மறந்து நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்தனர்!

இப்படி 56நாட்கள் நகர்ந்து சென்றன!

இடையிடையே ஏகப்பட்ட சோதனைகள்!

இராணுவம் வந்தது மீண்டும் அடித்து நொருக்கிப் பயமுறுத்திப்பார்த்தது! தொண்டர்கள் அசையவில்லை!

சத்தியாக்கிரகிகளுக்கு உணவு கிடையாதவாறு மூன்று நாட்கள் தொடர்ந்து தடுத்துப் பார்த்தனர்! பட்டினி கிடந்து செத்தாலும் இலட்சியத்திலிருந்துஅசையவிலலை தொண்டர்கள்!

அமரர் டாக்டர் நாகநாதனுக்கு அடித்துப் பார்த்தார்கள்—இரும்புமனிதரின் தலையில் பட்டு குண்டாந்தடி இரண்டாக முறிந்தது!

சத்தியாக்கிரகம் சட்ட மறுப்பாக மாறி—நாட்டின் தபால் சட்டத்தை மீறி—தமிழ் அரசுத்தபால் நிலையம் நிறுவப்பட்டு, தமிழரசு முத்திரைகள் அஞ்சலட்டைகள் வெளியிடப்பட்டன.

தமிழரசு முத்திரைகள் ஒட்டப்பட்ட கடிதங்களும் அஞ்சலட்டைகளும் தமிழரசு தபாலதிபர் திரு. க. நடராசா அவர்களினால் 'சீல்' வைக்கப்பட்டு தொண்டர்கள் மூலம் அவரவர் முகவரிகளுக்கு விநியோகிக்கப்பட்டன!

'கோப்பாய் பகுதிக்கு 'தமிழரசுத் தபால்காரனாக'நான் அப்போது பணியாற்றினேன்! தமிழரசு முத்திரை ஒட்டப்பட்ட சட்டவிரோத கடிதங்களை விநியோகித்தேன்!

இராணுவத்தினரால் தமிழரசுத் தபால் நிலையம் ஒரு நாள் இரவு அடித்து உடைக்கப்பட்டது! தபால் அதிபராக கடமையாற்றிய திரு. சு.நடராசா படுமோசமாக தாக்கப்பட்டார். அவரது வெண்மண்டை உடைந்தது!

அந்த இறுதி நாள் 1961 ஏப்ரல் 18—

தலைவர்கள், பா. உக்கள் அனைவரும் (திரு: சிவசிதம்

—4-ம் பக்கம் பார்க்க

**பட விமர்சனம்**

## தென்றலும் புயலும்

இந்தியத் தமிழ்த்திரைப் படங்களுடன் ஈழத்தில் தயாராகும் தமிழ்த்திரைப் படங்கள் போட்டியிட முடியுமா? அவற்றுக்கு ஈடு கொடுக்க முடியுமா?

அண்மையில் யாழ் விடோ திரையில் திரையிடப்பட்ட ராஜேஸ்வரி பிலிம்சாரின் 'தென்றலும் புயலும்'' படத்தைப் பார்த்தபோது "ஆம், முடியும்" என்ற பதிலே கிடைத்தது!

பெருமளவு விளம்பரம் ஏதுமின்றி திடீரென திரையிடப்பட்ட இப்படம் உள்ளூர் தமிழ் திரைப்படத் துறையில்ஏற்பட்டுள்ளதுரிதமான முன்னேற்றத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக மிளிருகிறது.

ஒரு குடும்பத்தில் அமைதித் தென்றலாக இருக்க வேண்டிய பெண் புயலாக மாறும்போது அது அந்தக் குடும்பத்தை எவ்வளவு தூரம் அழித்து விடுகிறது என்பதையும் — தாயன்பு சகோதர பாசம் — கடமையுணர்வு சமுதாய பணி — என்று இப்படிப் பல் வேறு குண இயல்புகளையும் சித்திரிக்கும் கதையமைப்பைக் கொண்ட இத்திரைப்படம் எந்த இடத்திலும் தொய்வின்றி விறுவிறுப்புடன் ஓடுவது இதன் தனிச்சிறப்பு.

தமிழ் ஈழத் தலைநகரான திருகோணமலையிலேயே பெரும்பாலான காட்சிகள் படம் பிடிக்கப்பட்டுள்ளதால், கோணமாமலையின் இயற்கையெழிலைக் கண்டு ரசிக்க முடிகிறது. இன்னும் இதில் சற்று கூடுதல் அக்கறை செலுத்தியிருக்கலாம்.

வரதனாக தோன்றும் வேதநாயகம் நடிப்பில் அமைதியும் நிறைவும் காணப்படுகிறது. அவர்தம்பிசாந்தனாக தோன்றும் சிவபாதவிருதயர் உணர்ச்சிகரமாகவும், விறுவிறுப்பாகவும் நடித்திருக்கிறார். ஆசீர்வாதமாக தோன்றும் ஜவாஹர் நடிகவேள் எம். ஆர். ராதாவை நினைவூட்டுகிறார். வாசுகியாக தோனறும் சந்திரகலாவும் சாந்தினியாகத் தோன்றும் ஹெலன் குமாரியும் திரைப்பட அனுபவமுள்ளவர்கள். அவர்களது நடிப்பில் அனுபவ முத்திரை தெரிகிறது.

நகைச்சுவை விருந்துதந்து நம்மை சிரிக்க வைக்கும் விஜேதனாக தோன்றும் அமரசிங்கம், இறுதியில் தன் இதயத்தையே தந்து [illegible] போர் இதயங்களை [illegible] ரில் குளிக்க வைக்கிறார்! டாக்டராக மிடுக்காக தோன்றும் டீன் குமாரின் நடிப்பும் குறைசொல்லும் படியாக இல்லை!

சில இடங்களில் டைரக்ஷனில் தவறுகள் காணப்பட்டாலும் முழுமையாகப் படத்தைப் பார்க்கும்போது அந்தக் குறைகள் தெரியவில்லை! படத்தொகுப்பு (எடிட்டிங்)நன்றாக உள்ளது.

பாடல்கள் எதுவும் நெஞ்சில் பதியும் படியாக இல்லை.

படம் ஓட வேண்டுமென்பதற்காகபாலுணர்ச்சியைத் தூண்டி விடும்'செக்ஸ்'காட்சிகள் அதுவும் புனிதகோவில் பிரகாரத்தில் தேவைதானா? இது தமிழ்பண்பாகுமா?

'மண்வாசனை' என்ற பிரச்சினைக்குள் சிக்காது அனைவருக்கும்புரியும் பொதுவான தமிழை உரையாடலில் கையாண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

மொத்தத்தில் — ஈழத் தமிழ்த்திரையுலகின் மரியாதையை காத்து விட்டது 'தென்றலும் புயலும்'

—வே.

லாலா
நீலசோப்
எல்லா கடைகளிலும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# ஊரார் உரையாடல்

கலா: வாடி மாலா, எப்பிடி புத்தாண்டெல்லாம்? என்ன புதிய 'சாறி' வாங்கினுய் இந்த முறை?

மாலா: புத்தாண்டும் கொண்டாட்டமும் நமக்கென்னடி? புதிய 'சாறி' விநியோகத்திலும் தமிழ் ஈழத்துக்கு ஒரு சட்டம்—சிங்கள நாட்டுக்கு ஒரு சட்டம்; இந்த அடிமை நிலை மாறுமட்டும் என்னடி கொண்டாட்டம் நமக்கெல்லாம்?

கலா: நீ என்னடி சொல்கிறுய்?

மாலா: ஆமடி, புத்தாண்டுக்கு இறக்குமதிசெய்யப்பட்ட சாறி கொடுத்தார்கள் அல்லாவா? அது வழங்கப்படும் முறையிலும் கூடப் பாரபட்சம்!

கலா: பாரபட்சமா, என்னடியம்மா நீ எல்லாவற்றிலும் அரசியலைக் கொண்டு வாருய்?

மாலா: அரசியல்தான் குசினிவரை வந்து இப்போது ஆடைவரை வந்துவிட்டதே... புதிய சாறி கொடுத்தார்களே, அது எப்படித் தெரியுமோ? சிங்கள நாட்டில் ஒரு பங்கீட்டு அட்டைக்கு ஒரு 'சாறி' யாம்—தமிழ் ஈழத்திலோ லொத்தர் போட்டு முதல் பத்துப் பேருக்குதாளும்! எப்படியிருக்குடி தார்மீக விளையாட்டு?

கலா: நீ என்னடி எல்லாத்துக்கும் இன அரசியல் கண்ணுடி போட்டுப்பார்க்கிருய்?

மாலா: நானு இன அரசியல் பேசுறேன்? சிங்கள அரசாங்கம்தானே பெரிய விஷயங்களில் மட்டுமன்றி இப்படிப்பட்ட சின்ன விஷயங்களில்கூட பாரபட்சம் காட்டுது! இதுக்கெல்லாம் காரணம் என்ன தெரியுமோ? தமிழ் ஈழம் சிங்கள அரசின் ஒரு காலனி நாடாக இருப்பதுதான்...!

கலா: என்னமோ போடி- இந்த அரசியல் வம்பெல்லாம் எனக்கு ஏன் என்று ஒதுங்கியிருந்தேன் — ஆனு இப்போ நீ சொல்றதைப் பார்த்தா, அரசியலை நாம் விட்டாலும் அது நம்மை விடாதுபோலிருக்கே!

மாலா: இப்ப புரியுதாடி- அப்படி வாடி வழிக்கு—உன்னைமாதிரி பெண்கள் எல்லாம் தமிழ் மகளிர் பேரவையிலே சேர்ந்து இதுபற்றியெல்லாம் அலசி ஆராய்ந்து ஊருக்கு எடுத்துச் சொல்லணும்...அது சரி இன்னும் ஒன்று தெரியுமோ?

கலா: என்னது? நீதான் அதையும் சொல்லேன்?

மாலா: ஜனாதிபதி ஜே. ஆரும் பிரதமரும் ஆங்கிலத்தில் விடுத்த புத்தாண்டுச் செய்தியில கூட புத்தாண்டுக்கு என்ன சொல்லைப்பயன் படுத்தியிருக்கிருர்கள் தெரியுமோ... "அளுத் அவுறுத"

கலா: அப்படியெண்டால் என்னடி?

மாலா: சிங்களத்தில் புத்தாண்டை அப்படித்தான் கூறுவார்கள். ஆனல் ஆங்கில அறிக்கையிலும் இப்போது இப்படியான சிங்களச் சொற்களையே சிங்கள ஆளவந்தார் புகுத்திவருகிருர்கள். இது இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது!

கலா: ஏன் அப்படி?

மாலா: இந்தநாடு முழுவதும் சிங்கள தேசியத்துக்கும், சிங்கள ஆதிக்கத்துக்கும் கட்டுப்பட்டது என்பதை எடுத்துக்காட்டத்தான்! சிங்கள ஏகாதிபத்திய உணர்வின் வெளிப்பாடுதான்... புரிகிறதாடி கலா?

கலா: புரிகிறது, புரிகிறது—எங்கே தமிழ் மகளிர் பேரவை உறுப்பினர் படிவம் இருந்தா ஒன்று கொடடி— இதோ இப்பவே நிரப்பித்தாறன்...!

—அஞ்சிறைத் தும்பி.

## வண்ணூர் பண்ணை வட மேற்கில் கூட்டணி கருத்தரங்கு

இடம்: சிவப்பிரகாசம் வீதியில் அமைந்த கூட்டணிக் கிளை முன்றல்

நாள்: 22.4.78 சனி பிற்பகல் 6 மணி

தலைவர்: சட்டத்தரணி இ. விசுவநாதன்.

உரையாற்றுவோர்:
கரிகாலன்
(உலகில் தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டம்)
க. சச்சிதானந்தன்
(தமிழ் ஈழப் பொருளாதாரம்)
மு. சிவசிதம்பரம் பா. உ.
(நமது போராட்டம்)

## மேதின விழா—

—1-ம் பககத்தொடர்

உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர்.

உபதலைவர்கள்:- திரு. த. நமசிவாயம். திரு.ஆர். விசுவநாதன் செயலாளர்:- திரு. ஐ. தி. சம்பந்தன். செயலாளர் (த. தொ. ச. கூ) இணைச் செயலாளர்கள்:- மாவை சேனுதிராசா. திரு. செ; மெற்றுண்மயில் பொருளாளர்—திரு. வெற்றிவேலு. யோகேஸ்வரன் (யாழ் தே. அ. பே. உ) இணைப்பொருளாளர்:- திரு. ஆ. ஆனந்தராசா.

இல்விழா மிகவும் பிரமாண்டமான முறையில் ஊர்வலத்துடனும், கலைநிகழ்ச்சிகளுடனும் நடைபெறும் ஊர்வலத்தில் துவிச்சக்கர வண்டிகள், மாட்டு வண்டில்கள் உழவுயந்திரங்கள் ஊர்திகள் என்பன பங்குபற்ற உள்ளன. கலைநிகழ்ச்சிகளில் நாட்டுக்கூத்து பரதநாட்டியம் மேள வாத்தியக் கச்சேரி என்பன சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெறஉள்ளன.




ஆசிரியர், "சுதந்திரன்",
ஐயா,

இன்றைய (ஞாயிறு 9. 4. 78) சுதந்திரனில், காணப்படும் ஆசிரியர் தலையங்கத்திற்கும், அரசியல் மடலுக்கும் சேர்த்து ஒரு சபாஷ் போடாமல் இருக்க முடியாது இரண்டுமே பிரமாதம் வாழ்க! கோவையின் பேனு முனை!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பல்கலைக் கழகங்கள் வேண்டும் என்பதைத் தங்களுக்கே உரிய தனித் தன்மையான நடையில் நன்ருக வற்புறுத்தியுள்ளீர்கள்.

'மன்மதபாணத்தில் மயங்கிடுவோமா?' என்பது நல்ல கேள்வி, மயங்கமாட்டோம் என மார்பிலே தட்டிச்சொல்ல மாட்டார்களா எமது இளம் சிங்கங்கள்? தேனுக்குள் விழுந்து சாகக்கூடிய எறும்புகளல்ல எமது இளைஞர்கள், கூட்டணித் தலைவர்களுக்கும் நல்ல "டோஸ்" கொடுத்திருக்கின்றீர்கள்.

மேலும் கலைஞர் கருணுநிதியின் மும்மொழித்திட்டம் பற்றிய கட்டுரை 'சுதந்திரன் இதழுக்கே மெருகூட்டுகிறது. கலைஞரின் கட்டுரை பற்றி விமர்சிக்க எமக்கென்ன தகுதி? ஆனல் ஒன்று மட்டும் கூறலாம், கலைஞரின் கட்டுரையில் காணப்படும் கருத்துக்கள் இலங்கைக்கும் முழுக்க முழுக்கப் பொருந்தும்!

தென்புலோலியூர்.
புலோலி

இப்படிக்கு
ம. சத்தியமூர்த்தி

# தமிழ் இளைஞர் பேரவை பொதுக்குழுக் கூட்டம்

தமிழ் இளைஞர் பேரவையின் மத்திய செயற்குழுவின் தீர்மானப்படி 6-5-78 சனிக்கிழமை மத்தியசெயற்குழுக் கூட்டத்தையும் 7-5-78 ஞாயிற்றுக்கிழமை பொதுக் கூட்டத்தையும் வவுனியாவில் நடாத்த வேண்டும்.

மேற்படி கூட்டங்களில் 12-5-78ல் தொடங்கும் த.வி. கூட்டணி மாநாட்டிற்கான பிரேரணைகள் பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

எனவே த.இ.பேரவையின் புதிய அமைப்பு விதியின்படி அமைந்துள்ள தொகுதி நடவடிக்கைக் குழு உறுப்பினரும், தற்பொழுது மத்திய செயற்குழு உறுப்பினராக உள்ளவர்களும் கூட்டாகவும் தனித்தும் கொண்டு வரப்படும் பிரேரணைகள் பிரேரித்து அனுமதிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

த. இ. பேரவையின் பொதுக்குழுக் கூட்டம் புதிய அமைப்பு விதியின்படி அமைந்த தொகுதி நடவடிக்கைக்குழு உறுப்பினரையும் தற்பொழுதுள்ள மத்திய செயற்குழுஉறுப்பினரையும் கொண்டதாயிருக்கும்.

ஆகவேபொதுக்குழு உறுப்பினர்களும் மத்திய செயற்குழு உறுப்பினர்களும் தங்களது பிரேரணைகளை 5-5-78 வெள்ளிக்கிழமைக்கு முன்னர், நிர்வாகச் செயலாளர், த. இ. பேரவை. த. வி. கூட்டணி அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சேர்ப்பிக்க வேண்டும். அல்லது 6 5.78 சனிக்கிழமை மத்திய செயற்குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கவேண்டும். இதற்கான நிர்வாக அறிவித்தல் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப் படும்.

இவ்வாறு மாவை சேனுதிராசா, அமைப்புச் செயலாளர் அறிவிக்கிருர்.

## வாராந்த கருத்தரங்கு

தமிழ் ஈழர் விடுதலைக் கூட்டணி தலைமைச்செயலகத்தில் 22-4-78 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு, திரு. வெ. யோகேஸ்வரன் பா.உ. தலைமையில் 'தமிழ் அகதிகள் புனர்வாழ்வு' என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் திரு. கே. சி. நித்தியானந்தா, திரு. க. நடராசா ஆகியோரும் உரைநிகழ்த்துவார்கள்.

## நிர்வாணமாக்கி..

—2-ம் பக்கத் தொடர்

ஊற்றினர்கள் நடக்கஏலாது எங்களை மேடையில் ஏறிக் குதிக்கச் சொன்னுர்கள்.

அந்தப் பெண்ணை யார் கொன்றதென அறிவதற்குத்தான் சித்திரவதை செய்தனர். ஞானப்பிரியா, திசநாயக்கா ஆகியோரைத் தெரியும்: ஏ. எஸ். பி.க்குப் பெயர் பீட்டர்பெரேரா, முருங்கன் இன்ஸ்பெக்டர் ஒன்றும் செய்யவில்லை; எங்களைக் கொண்டு சென்றபோது அங்கிருந்தார். எங்களைச் சித்திரவதை செய்த போது மற்றப்பக்கம் பார்த்துக்கொண்டிருந்தார். முருங்கன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றனர். டாக்டர் இல்லை. பின் எம். பி. யும், சட்டத்தரணி புதுமை நாயகம் ஆகியோரும் வந்து மன்னூர் ஆஸ்பத்திரிக்குப் பொலிஸ்ஜீப்பில் கொண்டு சென்றனர். 16நாள் ஆஸ்பத்திரியில் இருந்தேன்.

இதுவரை எங்களுக்கு எதிராக எவ்வித வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை. நான் ஏ. எஸ். பி.க்கு எதிராக வழக்கு போட்டிருக்கிறேன். மற்றவர்களும் வழக்கு போட்டிருக்கிருர்கள்.

## சித்திரை பதி—

—3-ம் பக்கத் தொடர்

பரத்தைத் தவிர) தடுப்புக் காவல் கட்டளையின்படி அன்றுபிற்பகல் கைது செய்யப்பட்டு விட்டனர்!

அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவோ ஊரடங்கு அமுலில் இருப்பதாகவோ யாருக்கும் அறிவிக்கப்படவில்லை!

செயலகத்தின் முன்பு நள்ளிரவு நேரம்—தமிழ் பெண் தொண்டர்கள் இறைவனை நோக்கிப் பக்திப்பாடல்களைப் பாடியபடி மறியலில் ஈடுபட்டிருக்கின்றனர்!

திடீரென்று அங்கு இராணுவக்குண்டர்கள் தோன்றுகின்றனர்; பெண் சத்தியாக்கிரகிகளை அடித்து இம்சித்து அப்புறப்படுத்த திட்டம் இடுகின்றனர்!

இதை எப்படியோ அறிந்து கொண்ட திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள், ஓடோடி சென்று அப்பெண்மணிகளுக்கு பாதுகாப்பாக அவர்கள் முன்னுள் அமர்ந்து கொள்ளுகிருர்!

பெண் சத்தியாக்கிரகிகளிடம் கலைந்து செல்லும்படி உத்தரவிடப்படுகிறது; மறுக்கின்றனர் அவர்கள்—

அடுத்த நிமிடம்—

தாக்குதல் ஆரம்பமாகிறது!

பெண்களைத் தாக்கவிடாமல் திரு. சிவசிதம்பரம் அவர்கள் குறுக்கே பாய்ந்து அடி அத்தனையையும் தாமே ஏற்றுக் கொள்ளுகிருர்.

உருட்டி உருட்டி திரு. சிவசிதம்பரம் அவர்கள் தாக்கப் படுகிருர்!

பெண்களை பலவந்தமாகத் தூக்கி டிறக்கில் ஏற்றுகின்றனர்!

யாழ் அரசாங்க செயலகம் முன்னர் அறப்போர் வீரர்களின் இரத்த வெள்ளமும் கண்ணீர்வெள்ளமும் கலந்து ஓடுகிறது!

நிராயுத பாணிகள், ஆயுத பாணிகளான இராணுவத்தினரால் முன்னறிவிப்பு இன்றி கொடுமைப்படுத்தப் பட்டனர்!

இரண்டு திங்களாக சிங்கள ஆட்சி, தமிழ் ஈழத்தில் [illegible]

திருமதி சிறிமா பண்டாரநாயகா!

ஆம், அன்று சிந்திய தியாக ரத்தம் அவம் போகவில்லை! அதுவே இன்று இளைஞர்களின் விடுதலை பேராவேசத்துக்கு வித்திட்டுள்ளது.

—கோவை

## கமிலஸ் நினைவு நாள்!

மன்னூரில் அண்மையில் காலமான இளைஞர் கமிலஸ் அவர்களின் 31வது நினைவு நாள் 18-4-78 செவ்வாயன்று அனுட்டிக்கப்பட்டது,

மில்க்வைற் மெடிக்கேற்றட் சோப்

ஆரோக்கிய வாழ்விற்கு மில்க்வைற் மெடிக்கேற்றட் சோப் பாவியுங்கள். அரைக்கட்டியாகவும், முழுக் கட்டியாகவும் கிடைக்கும்.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு.

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org